## கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் (என்டபிள்யூஎஸ்டீபீ பாகம்) - 2014

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (என்டபிள்யூஎஸ்டீபீ பாகம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557/2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2.09 ஆம் பிரிவின் II ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. கொழும்பு மாநகர சபை அதன் எல்லையினுள் அமுல்படுத்தப்படும் பணிகளுக்கு பொறுப்பாக உள்ளதுடன், கொலன்னாவை நகர சபை மற்றும் தெஹிவளை / கல்கிசை மாநகர சபைக்குரிய பிரதேசங்களில் அமுல்படுத்தப்படும் பணிகளுக்கு தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை பொறுப்பாக உள்ளது. கழிவு நீர் முகாமைத்துவ சேவைகளுடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள நகர மற்றும் புறநகர் வாழ் மக்களின் சுற்றாடல் மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். செயற்திட்டப் பிரதேசத்தினுள் வாழும் ஏறத்தாழ 645,000 வதிவிடத்தினருக்கான கழிவு நீர் முகாமைத்துவ சேவைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும். கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 13,410 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 116.6 மில்லியனானதுடன், அதில் ரூபா 9,200.8 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 80 மில்லியன் அல்லது 68.6 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் (ஓசீஆர்) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,300.2 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 20 மில்லியன் அல்லது 17.1 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிறப்பு நிதி வளங்களிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கும் மிகுதி ரூபா 1,909 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 16.6 மில்லியன் அல்லது 14.3 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் ரூபா 1,012.03 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 8.8 மில்லியன் தொகை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

மேலும், 2010 யூலை 02 இல் இலங்கை அரசிற்கும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபைக்குமிடையே உப நிதியளிப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உப நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் 82.5 சதவீதம் மானியங்கள் மற்றும் 17.5 சதவீதம் கடன்களின் கலவையினாலான கடன் உடன்படிக்கையிலிருந்தான பெறுவனவுகளிலிருந்து ரூபா 647.68 மில்லியனிற்குச் சமனான எஸ்டீஆர் 3.7 மில்லியன் (ஐ.அ.டொலர் 5.64 மில்லியன்) வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 364.35 மில்லியனிற்கு சமனான 3.17 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2009 திசெம்பர் 18 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2017 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்குகின்றனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதுவும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக நிதியளித்தல் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3.82 மில்லியன் பெறுமதியான செயற்திட்டத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 யூலை 22 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 3.82 மில்லியன் பெறுமதியான செயற்திட்டத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் பௌதீக ரீதியில் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பவற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டினுள் | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 5.63 | 647.68 | 200.00 | 1.405 | 183.82 | 1.405 | 183.82 |
| இலங்கை அரசாங்கம் | 3.17 | 364.35 | 50.00 | 0.108 | 14.11 | 0.458 | 59.06 |
| **மொத்தம்** | **8.80** | **1,012.03** | **250.00** | **1.513** | **197.93** | **1.863** | **242.88** |

## 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவளை, கல்கிசை மற்றும் கொலன்னாவை நகர சபைகளுக்குரிய பிரதேசங்களிலுள்ள 06 கழிவு நீர் பம்பும் நிலையங்களை புனரமைத்தல் / விரிவுபடுத்துவதற்கான ஒப்பந்தமானது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்த நிலையில் 2014 இல் வழங்கப்பட்டது. இதனால், செயற்திட்டத்தின் எஞ்சிய 03 வருட காலப்பகுதியினுள் குறித்த ஒப்பந்தங்களை முடிவுறுத்தல் சந்தேகத்திற்கிடமாகவிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றமானது முறையே 19 சதவீதம் மற்றும் 24 சதவீதம் ஆகும். மேலும், செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்தலில் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் வடிவமைப்பு கட்டத்தில் நீண்ட காலம் எடுக்கப்பட்டமை போன்ற காரணங்களால் 2014 ஆம் ஆண்டிற்கான அரசின் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 250 மில்லியன் தொகை முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

நடைமுறையில், செயற்திட்ட உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கணிப்பீடானது தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்படுவதுடன், செயற்திட்டமானது அதன் நிர்வாக நடவடிக்கைகளுக்காக போதியளவான உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்திருந்த போதிலும் செயற்திட்டத்திலிருந்து 20 சதவீத மேந்தலை சாட்டப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபைக்கு 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 7.21 மில்லியன் மேந்தலை செலவினம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 நிதிக் கட்டுப்பாடுகளிலான பிரச்சினைகள்

நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.